# பள்ளிக் கல்வித்துறை – விழுப்புரம் மாவட்டம்

# தமிழ்த் திறனறித் தேர்வு (TTSE) - 2023 -24

### மாதிரித் தேர்வு – 2

1. கீழ்க்கண்டவற்றுள் கரகாட்டத்துடன் தொடர்பில்லாத ஒன்று

   அ) விழுப்புரம் ஆ) திண்டுக்கல் இ) மதுரை ஈ) திருச்சி

2. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

   அ) கரகாட்டம் - குடத்தைத் தலையில் வைத்து ஆடுவது.

   ஆ) மயிலாட்டம் - கரகாட்டதத்தின் துணையாட்டமாகக் கருதப்படுவது.

   இ) காவடியாட்டம் - தமிழ்நாட்டில் மட்டுமே ஆடப்படுவது

   ஈ) தேவராட்டம் - ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்

3. சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவது.

   அ) கரகாட்டம் ஆ) நிகழ்கலை இ) ஒயிலாட்டம் ஈ) மயிலாட்டம்

4. 'இராச சோழன் தெரு 'அமைந்துள்ள இடம்.

   அ) சிங்கப்பூரில் ஆ) கோலாலம்பூரில் இ) மதுரையில் ஈ) இலங்கையில்

5. பொருத்தி விடை தருக.

   | | | | |
   |---|---|---|---|
   | 1) | சிலம்பு | i. | தலையில் அணிவது |
   | 2) | அரைநாண் | ii. | காலில் அணிவது |
   | 3) | சுட்டி | iii. | நெற்றியில் அணிவது |
   | 4) | சூழி | iv. | இடையில் அணிவது |

   அ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

   ஆ) (1) – (ii), (2) – (iv), (3) – (i), (4) – (iii)

   இ) (1) – (ii), (2) – (iv), (3) – (iii), (4) – (i)

   ஈ) (1) – (iii), (2) – (i), (3) – (iv), (4) – (ii)

6. "நீரற வறியாக் கரகத்து" என்ற பாடலடி இடம்பெறும் நூல்.

   அ) அகநானூறு ஆ ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) நற்றிணை

7. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.

   அ) தேவதுந்துபி ஆ) நையாண்டி இ) நாதசுரம் ஈ) பறை

8. சரியானக் கூற்றைத் தெரிவு செய்க.

   கூற்று 1: ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துற்ற சிறுதுணியை இசைக்கேற்ப வீசி ஆடுவது ஒயிலாட்டம்

   கூற்று 2: தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாள மாக்கியவர் சா. கந்தசாமி

   அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

   இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

9. தவறானத் தொடரைக் கண்டறிக.

   அ) அரசன் அரசி வேடமிட்டு ஆடப்படுவது பொய்க்கால் குதிரை ஆட்டம்

   ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலியாட்டம்.

   இ) வானத்துத் தேவர்களே வந்து ஆடுவது தேவராட்டம்.

   ஈ) 'தப்பு' என்னும் தோற்கருவியை இசைத்துக் கொண்டு ஆடுவது தப்பாட்டம்.

10. சரியானக் கூற்றைத் தெரிவு செய்க.

   கூற்று 1: அருணகிரிநாதர் தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார்.

   கூற்று 2: பொய்க்கால் குதிரை ஆட்டத்தை கேரளாவில் புரவியாட்டம் என அழைப்பர்.

அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

11. "நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் " என்றவர்.

அ) ம. பொ. சி ஆ ) ந. முத்துசாமி இ) திரு.வி. க ஈ) சா. கந்தசாமி

12. 'கற்பாவை ' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

அ) உமாமகேஸ்வரி ஆ) ம.பொ.சிவஞானம் இ) ந. முத்துசாமி ஈ) குமரகுருபரர்

13. சரியான வரிசையினைத் தெரிவு செய்க.

அ) வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறைய

ஆ) விரிசோதியின் தன்மேனியின் வெய்யோனொளி மறைய

இ) வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறைய

ஈ) தன்மேனியின் வெய்யோனொளி விரிசோதியின் மறைய

14. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி--------------------

அ) ஜால்ரா ஆ) பறை இ) உறுமி ஈ) தவில்

15. "பைம்பொன் சும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாட" இவ்வடியில் 'பண்டி' என்பது.

அ) தலை ஆ) கால் இ) வயிறு ஈ) கண்

16. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்லஉள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிப்புரிவதால் ஈ) அங்குவறுமைஇல்லாததால்

17. பொருத்தி விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| 1) | குறிஞ்சி | i. | வைகறை |
| 2) | முல்லை | ii. | யாமம் |
| 3) | மருதம் | iii. | எற்பாடு |
| 4) | நெய்தல் | iv. | மாலை |

அ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

ஆ) (1) – (ii), (2) – (iv), (3) – (i), (4) – (iii)

இ) (1) – (ii), (2) – (iv), (3) – (iii), (4) – (i)

ஈ) (1) – (iii), (2) – (i), (3) – (iv), (4) – (ii)

18. குளிர் காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள்

அ) முல்லை , குறிஞ்சி , மருதம் நிலங்கள் ஆ) குறிஞ்சி , பாலை , நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி ,மருதம் ,நெய்தல் நிலங்கள் ஈ) மருதம் , நெய்தல் , பாலை நிலங்கள்.

19. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது ?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

20. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

அ) குறிஞ்சி - காட்டாறு

ஆ) முல்லை - திருமால்

இ) நெய்தல் – முதலை சுறா

ஈ) பாலை - பஞ்சுரப்பண்

21. கீழ்க்கண்டவற்றுள் முல்லைத் திணையோடு தொடர்புடையது.

அ) மீன்கோட்பறை ஆ) ஏறுகோட்பறை இ) தொண்டகம் ஈ) துடி

22. மாதவி ஆடிய ஆடல்களில் ஒன்று.

அ) காவடியாட்டம் ஆ) தேவராட்டம் இ) ஒயிலாட்டம் ஈ) குடக்கூத்து

23. கீழ்க்கண்டவற்றுள் மயிலாட்டத்தோடு தொடர்புடையது.

அ) ஜால்ரா ஆ) நையாண்டி மேளம் இ) உறுமி ஈ) பறை

24. கரகாட்டத்தின் துணையாட்டமாக ஆடப்படும் ஆட்டம்.

அ) காவடியாட்டம் ஆ) மயிலாட்டம் இ) ஒயிலாட்டம் ஈ) தேவராட்டம்

25. மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

26. ம.பொ.சிவஞானம் தனது உயரிய சொத்தாகக் கருதியது.

அ) பதவி ஆ) பொருள் இ) நூல்கள் ஈ) பட்டம்

27. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கியவர்-----.

அ) விநாயகம் ஆ) ரஷித்

இ) ம. பொ. சிவஞானம் ஈ) மங்கலக்கிழார்

28. தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தவர்

அ) காமராஜர் ஆ) இராஜாஜி இ) அண்ணா ஈ) எம்.ஜி. ஆர்

29. மொழி அடிப்படையில் முதன் முதல் பிரிந்த மாநிலம்.

அ) ஆந்திரா ஆ) தமிழ்நாடு இ) கேரளா ஈ) குஜராத்

30. கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணைய பாடுபட்டவர்

அ) ந.முத்துசாமி ஆ) ஏ. நேசமணி இ) மு.கருணாநிதி ஈ) எவரும் இல்லை

31. கீழ்க்கண்டவற்றுள் கல்வெட்டோடு தொடர்வுடைய இலக்கியம்.

அ) மெய்க்கீர்த்தி ஆ) கல்வெட்டு இ) செப்பேடு ஈ) நடுகல்

32. "திருபுவனச் சக்கரவர்த்தி " என்ற பட்டம் சூடியவர்.

அ) முதலாம் இராசராசன் ஆ) இரண்டாம் இராசராசன்

இ) முதலாம் ராசேந்திரன் ஈ) இரண்டாம்ராசேந்திரன்

33. சரியானக் கூற்றைத் தெரிவு செய்க.

கூற்று 1: புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டவை மெய்கீர்த்திகள்.

கூற்று 2: முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் வடிக்கப்பட்டுள்ளன.

அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

34. "கவிதை வாழ்க்கையின் திறனாய்வு " என்றவர்.

அ) ஆர்னால்டு ஆ) எல்லிஸ் இ) முருகானந்தம் ஈ) வீ. அரசு

35. "<u>**மண்ணுள் வினைஞர்**</u> " என்பவர்.

அ) சிற்பி ஆ) ஓவியர் இ) நெய்பவர் ஈ) வணிகர்

36. ஐம்பெரும் காப்பியம் முறைவைப்பு முறையை குறிப்பிடும் நூல்.

அ) திருத்தணிகை உலா ஆ) மூவருலா இ) கந்தர் அலங்காரம் ஈ) தேவாரம்

37. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு , மண் , ஏர் , மாடு ஆ) மண் , மாடு, ஏர் , உழவு

இ) உழவு, ஏர். மண், மாடு ஈ) ஏர் , உழவு , மாடு , மண்

38. "தன் நாட்டு மக்களுக்கு தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தி தொடர் உணர்த்தும் பொருள்.

அ) மேம்பட்ட நிர்வாக திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

39. கீழ்க்கண்டவற்றுள் நாட்டியத்தோடு தொடர்புடையவர்

அ) பால சரஸ்வதி ஆ) ராஜம் கிருஷ்ணன் இ) சின்னப்பிள்ளை ஈ) கிருஷ்ணம்மாள்

40. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

அ) எம். எஸ். சுப்புலட்சுமி - தாமரைத்திரு

ஆ) பாலசரஸ்வதி - சாகித்திய அகாதெமி

இ) ராஜம் கிருஷ்ணன் – பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி

ஈ) சின்னப்பிள்ளை – காந்தி அமைதி விருது.

41. இருநாட்டு அரசர்களும் தும்பை பூவைச்சூடி போரிடுவதன் காரணம்.

அ) நாட்டை கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

42. மெய்க்கீர்த்தி என்ற பெயர் -------------------- காலத்தில் வந்தது

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

43. அகலிகை, ஆத்ம சிந்தனை முதலிய படைப்புகளுக்கு உரியவர்.

அ) திரு.வி.க ஆ) கு. ப.ரா இ) அயோத்திதாசன் ஈ) ஈ.வெ.ரா

44. 'சிந்தா மணியாம் திருக்குறள் படைத்தான்' என்னும் பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்.

அ) வளையாபதி ஆ) குண்டலகேசி

இ) திருத்தணிகை உலா ஈ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

45. மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்டு கொத்துக் கொத்தாகப் பூக்கும் பூ.

அ) வாகைப்பூ ஆ) வஞ்சிப்பூ இ) நொச்சிப்பூ ஈ) பருத்திப்பூ

46. உழிஞைத் திணையோடு தொடர்புடைய ஒன்று.

அ) முடக்கொற்றான் ஆ) தூதுவளை இ) பாலைக்கொடி ஈ) அவரை

47. காஞ்சி என்பது ஒருவகை.

அ) நெடுமரம் ஆ) குறுமரம் இ) செடி ஈ) கொடி

48. சங்க இலக்கிய அறங்கள் இயல்பானவை. 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று கூறியவர்.

அ) அர்னால்டு ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஜி.யு. போப் ஈ) மாங்குடி மருதனார்

49. அரசர்கள் அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியவர்,

அ) ஆவூர் மூலங்கிழார் ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) மாங்குடி மருதனார் ஈ) ஊன்பொதி பசுங்குடையார்

50. நன்றும் தீதும் ஆய்தலும், அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்று கூறும் நூல்.

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை

51. செம்மை சான்ற காவிதி மாக்கள்என்று அமைச்சர்களை கூறும் புலவர்.

அ) ஏணிச்சேரி முடமோசியார் ஆ) மாங்குடிமருதனார்

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) ஊன்பொதிபசுங்குடையார்

52. 'எரியார் எறிதல் யாவணது எறிந்தார் எதிர் சென்று எறிதலும் செல்லான்' என்று குறிப்பிடும் நூல்.

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை

53. உதவி செய்தலை உதவி ஆண்மை என்று கூறியவர்.

அ) ஈழத்துப்பூதன் தேவனார் ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) மாங்குடிமருதனார்

54. வாய்மையைப் பிழையா நல் மொழி என்று குறிப்பிடும் நூல்..

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) பட்டினப்பாலை

55. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது.

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

56. சரியான வரிசையினைத் தெரிவு செய்க.

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

57 .'இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆய் அல்லன்' –இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல்.

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை

58. சிலை, மிசை, புள் இவற்றின் பொருள்கள் முறையே.

அ) வில், பறவை, மேலே ஆ) மேலே, பறவை, வில்

இ) வில், மேலே, பறவை ஈ) பறவை, மேலே, வில்

59. 'கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்' இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பால்வையோடு கலைப் பணிபுரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

60. ஜெயகாந்தன் உன்னைப் போல் ஒருவன் திரைப்படத்திற்காக பெற்ற விருது

அ) குடியரசுத்தலைவர் விருது ஆ) சாகித்ய அகாதெமி விருது

இ) ஞான பீட விருது ஈ) தாமரைத் திருவிருது.

61. நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு, கம்பீரமானகுரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் இவைகள்தாம் ஜெயகாந்தன்என்றுகூறியவர்.

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன் இ) சி.சு.செல்லப்பா ஈ) ம.பொ.சிவஞானம்

62. "ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்" என்று கூறியவர்.

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன் இ) ஜெயகாந்தன் ஈ) ம.பொ.சிவஞானம்

63. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க,

அ) தாமரைத்திரு விருது – தர்க்கத்திற்கு அப்பால்

ஆ) சோவித் நாட்டு விருது – இமயத்துக்கு அப்பால்

இ) சாகித்திய அகாதெமி விருது – சிலநேரங்களில் சில மனிதர்கள்

ஈ) குடியரசுத் தலைவர் விருது – உன்னைப்போல் ஒருவன்

64. "எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்" – என்ற பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர்.

அ) பட்டுக்கோட்டை ஆ) ஜெயகாந்தன் இ) கி. வ. ஜ ஈ) ம. பொ. சி.

65. பொருத்தி விடை தருக.

1) குருபீடம் i. புதினங்கள்
2) பிரளயம் ii. மொழிபெயர்ப்பு
3) சுந்தர காண்டம் iii. குறும்புதினம்
4) வாழ்விக்கவந்த காந்தி iv. சிறுகதைத் தொகுப்பு

அ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)
ஆ) (1) – (ii), (2) – (iv), (3) – (i), (4) – (iii)
இ) (1) – (ii), (2) – (iv), (3) – (iii), (4) – (i)
ஈ) (1) – (iii), (2) – (i), (3) – (iv), (4) – (ii)

66. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க
அ) தேவன் வருவாரா – சிறுகதைத் தொகுப்பு
ஆ) ரிஷிமூலம் – திரைப்படம்
இ) பாரிசுக்குப் போ - புதினங்கள்
ஈ) ஒரு கதாசிரியனின் கதை - மொழிபெயர்ப்புகள்

67. கீழ்க்கண்டவற்றுள் ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகள் அல்லாத ஒன்று.
அ) ஊருக்கு நூறு பேர் ஆ) சிலநேரங்களில் சில மனிதர்கள்
இ) கங்கை எங்கே போகிறாள் ஈ) யாருக்காக அழுதான்

68. கீழ்க்கண்டவற்றுள் ஜெயகாந்தனின் குறும்புதினம் அல்லாத ஒன்று.
அ) பிரம்ம உபதேசம் ஆ யாருக்காக அழுதான்
இ) இனிப்பும் கரிப்பும் ஈ) கருணையினால் அல்ல.

69. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமையவேண்டியது மனிதவாழ்வின் பிரச்சினைகளே என்று கூறியவர்
அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன்
இ) ஜெயகாந்தன் ஈ) ம.பொ.சிவஞானம்

70. ஜெயகாந்தன் தர்க்கத்திற்கு அப்பால் சிறுகதை அமைந்த தொகுப்பு
அ) குருபீடம் அ) யுகசந்தி இ) ஒருபிடி சோறு ஈ) உண்மைசுடும்

71. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்…" - இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலை விதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

72. கவிஞர் நாகூர் ரூமியின் இயற்பெயர்
அ) முகமது நபி ஆ) அப்துல் ரகுமான் இ) முகமது ரஃபி ஈ) சந்தா சாகிப்

73. கப்பலுக்குப் போன மச்சான் என்னும் நாவலை எழுதியவர்.
அ) முகமது நபி ஆ) அப்துல் ரகுமான் இ) ஜெயகாந்தன் ஈ) முகமது ரஃபி

74. பூக்கையைக்குவித்துப்பூவேபுரிவொடு காக்க என்று யார் யாருக்காக வேண்டினார்.
அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத்தமக்காக
இ) கருணையன்பூக்களுக்காக ஈ) எலிசபெத்பூமிக்காக

75. திருமுழுக்கு யோவானுக்கு வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இட்ட பெயர்
அ ) திருமுழுக்கு யோவான் ஆ) கருணையன் இ) யோக்கோபு ஈ) ) யுதாசு

76. வீரமா முனிவருக்கு இஸ்மத் சன்யாசி என்னும் பட்டத்தை வழங்கியவர்-
அ) திருமுழுக்கு யோவான் ஆ) மத்தேயு இ) யோக்கோபு ஈ) சந்தாசாகிப்

77. இஸ்மத் சன்யாசி என்னும் சொல்லின் பொருள்
அ) அருளுடையவர் ஆ) முனிவர் இ) அன்பானவர் ஈ) தூய துறவி

78. தமிழில் தோன்றிய முதல் அகராதி நூல்.

அ) பேரகராதி ஆ) சதுரகராதி இ) கலைக்களஞ்சிய அகராதி ஈ) அகராதி நிகண்டு

79. பொருத்தி விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| 1) | சேக்கை | i. | உடல் |
| 2) | யாக்கை | ii. | பயனுள்ள |
| 3) | பிணித்து | iii. | படுக்கை |
| 4) | வாய்ந்த | iv. | கட்டி |

அ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

ஆ) (1) – (ii), (2) – (iv), (3) – (i), (4) – (iii)

இ) (1) – (ii), (2) – (iv), (3) – (iii), (4) – (i)

ஈ) (1) – (iii), (2) – (i), (3) – (iv), (4) – (ii)

80. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

அ) கொம்பு – கிளை

ஆ) புழை - துளை

இ) தேம்ப - அழுவ

ஈ) அசும்பு - நிலம்

81. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

அ) காக்கென்று – தொகுத்தல் விகாரம்

ஆ) காணீர் - இடைச்சொல்

இ) காய்மணி - வினைத்தொகை

ஈ) மெய்முறை - வேற்றுமைத்தொகை

82. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

83. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது

அ) தன்மையணி ஆ) தீவக அணி

இ) நிரல்நிறை அணி ஈ) தற்குறிப்பேற்றயணி

84. தீவகம் என்னும் சொல்லின் பொருள்

அ) விளக்கு ஆ) நெருப்பு இ) காற்று ஈ) வெம்மை

85. ஓரிடத்தில் நின்ற சொல் செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்தி பொருள் தருவது

அ) தன்மையணி ஆ) தீவக அணி

இ) நிரல்நிறை அணி ஈ) தற்குறிப்பேற்றயணி

86. எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மை அமையப் பாடுவது

அ) தன்மையணி ஆ) தீவக அணி

இ) நிரல்நிறை அணி ஈ) தற்குறிப்பேற்றயணி

87. தேம்பாவணிநூலின் பாட்டுடைத் தலைவன்.

அ) கிருத்து ஆ) சூசையப்பர் இ) நபிகள்நாயகம் ஈ) சிவன்

88. தேம்பாவணிநூலின்காண்டம், படலம், காதை முறையே.

அ) 4, 36, 3615 ஆ) 3, 30, 3615 இ) 3, 36, 3615 ஈ) 3, 36, 3516

89 தேம்பாவணிபடைக்கப்பெற்றஆண்டு ------- ஆம்நூற்றாண்டு.

அ) 15 ஆ) 16 இ) 17 ஈ) 18

90. கரிசல் எழுத்தாளர் வரிசையில் மூத்தவர்.

அ) ஜெயகாந்தன் ஆ) கு. அழகிரிசாமி இ) சோ. தர்மன் ஈ) பூமணி

91. சரியானக் கூற்றைத் தெரிவு செய்க.

கூற்று 1: இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன்கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்

கூற்று 2: மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும் என்ற பாடல் இதற்குச் சான்றாகும்.

அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

92. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க

அ) வெட்சிப் பூ ஆ) நொச்சிப்பூ இ) நெய்தல் பூ ஈ) வாகைப் பூ

93. பொருத்தி விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| 1) | நொச்சி | i. | கோட்டையைக் காக்கப் போரிடல் |
| 2) | தும்பை | ii. | கோட்டையைக் கைப்பற்ற போரிடல் |
| 3) | உழிஞை | iii. | நாட்டைக் கைப்பற்ற போரிடல் |
| 4) | வஞ்சி | iv. | வலிமை காரணமாகப் போரிடல் |

அ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

ஆ) (1) – (ii), (2) – (iv), (3) – (i), (4) – (iii)

இ) (1) – (ii), (2) – (iv), (3) – (iii), (4) – (i)

ஈ) (1) – (iii), (2) – (i), (3) – (iv), (4) – (ii)

94. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

அ) நண்பகல் - பகல் 10 மணி முதல் 2 மணிவரை

ஆ) வைகறை – இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை

இ) காலை – காலை 6 மணிமுதல் 10 மணிவரை

ஈ) எற்பாடு - இரவு 10 மணிமுதல் 2 மணிரை

95. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க

அ) குளிர் ஆ) யாமம் இ) வைகறை ஈ) மாலை

96. சரியான வரிசையைத் தேர்வு செய்க.

அ) வறுமை இல்லையால் ஓர் வண்மை இல்லை

ஆ) வண்மை இல்லை ஓர் வறுமை இல்லையால்

இ) இல்லை வண்மை ஓர் வறுமை இல்லையால்

ஈ) வறுமை இல்லை ஓர் வண்மை இல்லையால்

97. கீழ்க்கண்டவற்றுள் அயோத்தியா காண்டத்தில் அமைந்துள்ள படலம்

அ) நாட்டுப்படலம் ஆ) கங்கைபடலம் இ) கங்கைகாண் படலம் ஈ) வதைபடலம்

98. சிலப்பதிகாரத்தில் 'தொண்டி' என்னும் பகுதி எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அ) திருச்சி ஆ) இராமநாதபுரம் இ) சேலம் ஈ) கரூர்

99. 'சிலம்புச் செல்வர்' எனப்போற்றப்படுபவர்.

அ) கி. வ. ஜ. ஆ) உ. வே. சா இ) ம. பொ. சி ஈ) திரு. வி. க

100. சரியான வரிசையைத் தேர்வு செய்க.

அ) ஆரமும் அகிலும் தூசும் துகிரும் ஆ) தூசும் துகிரும் அகிலும் ஆரமும்

இ) தூசும் துகிரும் ஆரமும் அகிலும் ஈ) துகிரும் தூசும் ஆரமும் அகிலும்